**4.** முதலாம் பராக்கிரமபாகுவின் அரசியல் சாதனைகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் மதிப்பிடுக.

(i) இலங்கைத் தீவினை ஒன்றிணைத்தல் (09 புள்ளிகள்)

(ii) வெளிநாட்டுக் கொள்கை (07 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களுள் எவையேனும் **இரண்டிற்கு** அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இராசரட்டையில் சோழரின் ஆதிக்கம்

(ii) இரண்டாம் பராக்கிரமபாகு

(iii) கம்பளைக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் விரிவாக்கம்

(iv) கோட்டை காலத்தில் கல்வியும் இலக்கியமும்

(ஒவ்வொன்றுக்கும் 08 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளை ஒப்பிட்டுப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**7.** "1818 பிரித்தானியருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் இலங்கை வரலாற்றில் தீர்மானமிக்க சம்பவமாக விளங்குகின்றது "

(i) பிரித்தானிய எதிர்ப்புக் கிளர்ச்சி ஆரம்பமான பிரதேசத்தின் பெயர் யாது? (01 புள்ளி)

(ii) பிரித்தானிய எதிர்ப்புக் கிளர்ச்சியின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பிரித்தானிய எதிர்ப்புப் போராட்டம் ஏற்படுவதற்கு 1815 கண்டி உடன்படிக்கை வித்திட்ட விதத்தினைச் சுருக்கமாகத் தருக. (04 புள்ளிகள்)

(iv) 1818 இல் பிரித்தானிய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவுகள் இலங்கை வரலாற்றில் தீர்மானமிக்க முக்கியமான கட்டத்தின் குறியீடாக அமைந்த முறையினைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

agaram.lk

**8.** 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சி

(iii) பொன்னம்பலம் இராமநாதன்

(iv) 1956 பொதுத் தேர்தல்

(ஒவ்வொன்றுக்கும் 08 புள்ளிகள்)

* * *

